www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

19 07 99

எண்ணம் 10, கிண்ணம் 7



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஞானிக்கு ஞானம்



ஒரூரில் ஞானி ஒருவர் இருந்தார். அவருக்கு உணவுக்காக எண்ணெய் தேவையாக இருந்தது. அந்த ஊரிலிருந்த எண்ணெய் தயாரித்து விற்கும் வீட்டுக்கு அவர் சென்றார். அவர் சென்றவேளையில் எண்ணெய்க்காரரின் மகன் செக்கிழுக்கும் மாட்டைச் செக்கின் மேலேறி இருந்து கொண்டு கவனித்துக் கொண்டிருந்தான். அதை ஞானி பார்த்தார். சிறுவனான அவன் மாட்டைக் கவனிக்கவில்லை. ஆனால் மாடு செக்கை இழுத்துக் கொண்டிருந்தது.

ஞானிக்கு சிறுவனிடம் வேடிக்கையாகப் பேச ஆசையாக இருந்தது. "செக்கு இழுக்கும் மாடு பாவம். மாட்டின் கழுத்தில் மணியை ஏன் தொங்க விட்டிருக்கிறாய்?" என்று அவனிடம் கேட்டார். அதற்கு அச்சிறுவன் "நான் இதிலேயே இருந்தால் அம்மாவுக்கு உதவி செய்வது யார்? வீட்டுக்குள் இருக்கும்போது மணி கேட்டுக் கொண்டிருந்தால் மாடு செக்கைச் சுற்றி வருகிறது என்று தெரியும்." என்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஞானி அவனைப் பார்த்து, "அதுசரி! மாடு செக்கைச் சுற்றாமலே, மாடு தலையை ஆட்டிக் கொண்டு இருந்தால் மணி கேட்குமே!. நீ வீட்டினுள்ளே இருந்தால் நீ மாடு சுற்றுகிறது என்று நினைக்க வேண்டியது தான்." என்றார் சிரித்துக் கொண்டே. சிறுவன் ஞானியைப் பார்த்து, "ஐயா! அது மாடு, அதற்கு ஏமாற்றத் தெரியாது." என்றான்.

அதற்கு ஞானி, "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டார். அதற்குச் சிறுவன், "ஐயா, நீங்கள் தான் பார்க்கிறீர்களே! நான் செக்கில் இருந்து உங்களுடன் கதைத்துக் கொண்டிருக்கின்றேன். மாட்டைக் கவனிக்கவே இல்லை. மாடு நான் கவனித்துக் கொள்கிறேன் என்ற நினைப்பில் சுற்றகின்றது. ஆனால் நான்தான் மாட்டை ஏமாற்றி விட்டு எத்தனையோ காரியங்களைச் செய்கிறேன். மனிதன் ஏமாற்றுவான். மாடு ஏமாற்றுமா? சொல்லுங்கள்!." என்றான் சிறுவன்.

சிறுவனுக்கு மறுமொழி சொல்ல முடியாமல் சிறுவனின் சாமர்த்தியமான பேச்சில் திகைத்து நின்றார்.

வெற்றியை அடையப் பல வழிகள் இருக்கின்றன. நாம் நடக்கும் வழிதான் சரியானது என்று நினைத்தால் சில சமயத்தில் சங்கடத்தில் கொண்டு சென்று விட்டுவிடும்.

www.tamilarangam.net

# முன் கோபம்



கோபம் வரும்போது அதை அடக்கிப் பழகிக் கொள்ள வேண்டும். உலகத்தில் பெரும்பாலான கலகங்கள், சண்டைகள் எல்லாம் முன்கோபத்தினாலே உண்டாகின்றன. இதனாலேயே "ஆறுவது சினம்" என்று ஔவையார் கூறியிருக்கிறார். எவ்வளவு நல்ல, மேன்மையான குணங்களை ஒருவர் கொண்டிருந்தாலும், கோபம் வரும்வேளையில் நல்ல குணங்கள் எல்லாம் ஓடி மறைந்து விடுகின்றன.

இதற்கு பழைய புராணக்கதைகளில் இருந்துதான் உதாரணங்கள் கொண்டு வரவேண்டும் என்பதில்லை. அல்ஜீரிய மன்னர் ஹுசேனின் வரலாறும் ஒரு

www.tamilarangam.net

உதாரணம் தான். 1830ஆம் ஆண்டு தன்னைச் சந்தித்த பிரான்ஸ் தூதரோடு ஏற்பட்ட பேச்சுவார்த்தையின் போது ஏற்பட்ட கோபத்தில் பிரான்ஸ் தூதரைத் தாக்கி விட்டார் மன்னர் ஹுசேன். அதனால் பிரான்ஸ் அல்ஜீரியா மீது போரிட்டு வெற்றி கொண்டது. அல்ஜீரியா பிரான்ஸ் நாட்டின் ஒரு பகுதியாகி விட்டது.

1962ஆம் ஆண்டு தான் மீண்டும் சுதந்திரம் பெற்றது.

“நாடு தோறும் உள்ளன ஊர்கள்
நகர்களெங்கும்பலபலபள்ளி
தேடு கல்வியிலாதோர் ஊரை
தீயினுக்கிரையாக மடுத்தல்”
-மகாகவி.சுப்பிரமணியபாரதி-

அமைதியாக இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். நீங்கள் எவரையும் வசப்படுத்திக் கொள்ள முடியும்.
-செயின்ட் ஜஸ்ட்-

தன் மானம், சுயஅறிவு, தன்னடக்கம் ஆகிய பண்புகள் வாழ்வில் தலை சிறந்தவை.
-மெர்வின்-

www.tamilarangam.net

# ஔவையார்



தகடூர் அரசனான அதியமான் நெடுமான் அஞ்சி ஔவையாரிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தான். பெருந்தன்மையான குணங்களையும், மிகுந்த அறிவுக் கூர்மையும், வீரனுமாகிய அதியமானிடம், ஔவையார் நட்புடன் வாழ்ந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தனக்குக் கிடைத்த அதிசய நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்தவன் அதியமான்.

சேர அரசனான பெருஞ்சேரல் இரும்பொறைக்கும், தகடூர் அரசனுக்கும் மனத்தளவில் பகையிருந்து வந்தது. அதியமானின் புகழ் மிகுந்த வாழ்க்கை பல சிற்றரசர்களுக்குப் பொறாமையை ஏற்படுத்தியிருந்தது. நேரடியாக அவனை வெற்றி கொள்ளாமல், சதியின் மூலமாக அவனை வெற்றி கொள்ள எண்ணினார்கள். வெளிப்படையாகத் அவர்களுக்குத் தன் ஆதரவைத் தெரிவிக்காது விட்டாலும், மறை முகமாக அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தான் இரும்பொறை.

www.tamilarangam.net

இது அவர்களுக்குச் சாதகமாக அமைந்தது. இதனால் ஒருங்கு கூடியிருந்து ஆலோசனை நடத்தினர். “அதியன் சில போர்களில் வெற்றி பெற்று விட்டான். அவனால் தாக்கப்பட்டவர்கள் வீரம் குறைந்தவர்கள். அதனால் தான் அதியமான் மார் தட்டிக் கொள்ளுகின்றான். ஆனால் நாங்கள் நினைத்தால் அதியமானைப் போரிலேயே வென்று விடலாம்.” என்றான் ஒரு சிற்றரசன்.

பெருங் கூட்டமாக இருந்தபடியால், எல்லோருக்குமே உற்சாகம் ஏற்பட்டது. ஏகோபித்த குரலில் எல்லோருமே அச்சிற்றரசன் கூற்றை ஆரவாரித்து ஆமோதித்தார்கள். அப்போது இன்னொருவன் எழுந்தான். “அரசர்களே! எவையுமே ஆராய்ந்து செய்யப்பட வேண்டியவை. அதியமானின் திறமையை நாம் குறைவாக மதிப்பிடக் கூடாது. அவன் எங்களுக்கு ஏதாவது தீங்கு செய்திருக்கிறானா?. நாங்கள் தான் அவனது வளர்ச்சியைக் குறைவாக எண்ணினோம். பேசும்போது எதையும் யோசித்துப் பேச வேண்டும். சுவருக்கும் காதுண்டு. ஒற்றர்கள் யாராவது கவனித்தால் நடப்பதே வேறு!” என்றான்.

அவன் சொல்லை யாரும் ஏற்கவில்லை. அவனை அதியமானின் ஆதரவு தேடுகிறான் என்று பழித்தார்கள். அச்சிற்றரசன் சபையில் இருந்தவர்களைப் பார்த்து, “நான் அதியமானோடும்

www.tamilarangam.net

பழகியிருக்கின்றேன். உங்களோடும் பழகியிருக்கிறேன். அவனோடு மோதுவதால் வரும் விளைவுகளும் அறிந்தது தான். நான் சொல்வதை நீங்கள் ஏற்கப் போவதில்லை." என்று கூறி விட்டு வெளியேறி விட்டான்.

அவன் வரும் பாதையில் ஔவையாரும் எதிர்ப் பக்கமாக வந்து கொண்டிருந்தார். அவர் அதியமானுடன் பேரன்பு கொண்டவர் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஔவையாரைப் பணிவாகவே, "எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்.?" அவன் கேட்டான். அதற்கு ஔவையார், "மன்னர்கள் எல்லோரும் அடுத்த ஊரில் ஒருமித்துக் கூடி இருப்பதாகக் கேள்விப் பட்டேன். சென்றால் எல்லோரையும் ஒன்றாகப் பார்க்கலாமே என்றுதான் போகிறேன்." என்றார்.

அவனுக்கோ ஔவையார் அங்கு சென்றால் ஏதாவது விபரீதம் நேர்ந்து விடுமோ! என்ற பயம் உண்டாயிற்று. அவன் முகம் சலனப்படுவதைக் கண்ட ஔவையார், "நீ ஏதோ சொல்ல முடியாமல் கஷ்டப்படுவது தெரிகின்றது. எதுவாயிருந்தாலும் சொல்." என்றார். அவன் அவரிடம் நடந்த விஷயங்களைக் கூறினான். அதைத் தடுத்து விடும்படி கேட்டுக் கொண்டான். ஔவையார் அவனிடம், "நான் அவர்களது சதியினை முறியடிக்கிறேன். நீ பயப்பட வேண்டாம்." என்று கூறினார்.

www.tamilarangam.net

ஔவையார் அடுத்த ஊருக்குச் சென்றார். குறுநில மன்னர்கள் எல்லோரும் ஔவையாரைக் கண்டதும் திகைத்து விட்டார்கள். ஆனாலும் நிலைமையைச் சமாளிக்க, "வாருங்கள்! அறிவின் செல்வியே! உங்கள் வரவு நல்வரவாகுக. எல்லோரும் சேர்ந்து தமிழ் வளர்ச்சிக்கு என்ன செய்யலாம்? என்று ஒருமித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்." என்றான். "உங்கள் எண்ணம் நல்லது தான். அதற்கான விஷயங்களை நீங்கள் ஆராய்வதற்காகத் நீங்கள் கூடியிருப்பதாக நான் அறியவில்லை. அதியனுக்கு எதிராகச் சதியாலோசனை நடப்பதாக அல்லவா கேள்விப்பட்டேன்."

இதைச் சொல்லி விட்டு ஔவையார் எல்லோரையும் ஒருதரம் பார்த்தார். "நீங்கள் தகடூரானுக்கு எதிரிகள் என்பது நான் அறிந்தது தான். ஆனால் நான் உங்களுடைய பகையாளி இல்லை. உங்களின் நன்மைக்காகத் தான் சொல்லுகிறேன்." என்று கூறிப் பின்வரும் பாடலைப் பாடினார்:

"களம்புகல் ஓம்புமின் தெவ்விர்! போர் எதிர்ந்து
எம்முளும் உளவொரு பொருநனன்: வைகல்
எண் தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால்அன்னோனே."

www.tamilarangam.net

ஒரு நாளில் வலிவுள்ள எட்டுத் தேர்களைச் செய்யும் வல்லமை மிக்க ஒரு தொழிலாளி, திறமை மிகுந்த வேலைப்பாட்டுடன் கூடிய தேரொன்றைச் செய்ய எண்ணினான். தன்னுடைய திறமைகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு சிறந்த அழகும் வலிமையும் உள்ள தேரைச் செய்ய எண்ணினான். ஒரு நாளில் எட்டுத்தேர்களைச் செய்து முடிக்கும் அவனால் செய்யப்பட்டது ஒரு தேர்க்கால் தான்.

அதன் வேலைப்பாடுகள் எவ்வளவு அழகாக, நுட்பமாக இருக்கின்றன. ஒரு நாளில் எட்டுத்தேரை முடிக்கும் அவன் ஒரு தேர்க்காலைத்தான் செய்திருக்கின்றான் என்றால் தேர்க்காலின் வலிமை எத்தகையதாக இருக்கும். அவன் எண்ணப்படி அது அமைந்தது. அந்தத் தேர்க்காலைப் போன்றவன் அதியமான். அவனது நட்பினால் மட்டும் இதை நான் கூறவில்லை. அவனது பேராற்றல் உங்களுக்குத் தெரியாது. உங்களுக்கே நீங்கள் அழிவைத் தேடிக் கொள்ள வேண்டாம். இதைத்தான் நான் சொல்ல முடியும்." என்றார்.

தம்முடைய சதியினை ஔவையார் அறிந்து கொண்டார் என்பதை மட்டுமன்றி ஔவையாரின் அறிவுரைகளையும் யோசிக்கத் தொடங்கினார்கள். அதன் பின் சதி முயற்சி நிறுத்தப்படஇடதைச் சொல்லவும் வேண்டுமா?

www.tamilarangam.net

# உண்பதில் பலவிதம்



உண்ணும் உணவு இரை,சாப்பாடு என்று அழைக்கிறோம். இடத்துக்கு இடம் சாப்பிடுவதைப் பலவிதமாக அழைக்கிறோம். அருந்துதல், உறுஞ்சுதல், விழுங்கல் என உணவு உண்பது பலவிதமாகின்றது.

உதாரணத்துக்குச் சில:

அருந்துதல்- மிகச் சிறிய அளவில் உட்கொள்ளல்.
உண்ணல் - பசி தீர உண்ணுதல்.
உறிஞ்சுதல்- நீராலான உணவை உறிஞ்சுதல்
குடித்தல் - சிறிது சிறிதாக நீர்ப்பதார்த்தங்களை சாப்பிடுதல்.
தின்னல் - சுவையை அனுபவித்து உண்ணுதல்
துய்த்தல் - சுவைத்து மகிழ்ந்து உண்ணுதல்.
பருகல் - சிறிதே அளவான நீர்ப் பதார்த்தங்களைச்சுவைப்பது (ஐஸ்கிறீம்)
விழுங்கல் - பல்லுக்கும் நாக்குக்கும் வேலை கொடுக்காமல் தொண்டைக்கு மட்டும் வேலை கொடுப்பது.

மூலம்: சாவி வார இதழிலிருந்து.

www.tamilarangam.net

# கோல வண்ணப் பூச்சி





வண்ண வண்ணப் பூச்சி
வண்ணத்துப் பூச்சி
கண்ணுக்கழகான
காட்சிதரும் பூச்சி

பட்டுத்துணி மீது
பஞ்ச வர்ணத்தாலே
பொட்டிட்டது போலே
போர்வை கொண்ட பூச்சி

வீசிச் சிறகாட்டி
மின்னல் ஒளி கூட்டி
தேசதேசமெல்லாம்
சென்று வரும் பூச்சி

பூ நிறைந்த சோலை
புல் வெளிகளூடே

www.tamilarangam.net

தேனிருக்கும் பூவை
தேடிச் செல்லும் பூச்சி

எண்ண மலர் மீது
வந்தமர்ந்து வேறோர்
வண்ணமலர் போலே
மாறி நிற்கும் பூச்சி

ஓடிப் பறந்தெங்கும்
ஓய்தலின்றி ஊக்கம்
கூடியுழைக்கின்ற
கோல வண்ணப் பூச்சி

பூவை வருத்தாமல்
போயமர்ந்து தேனை
நாவினிக்கக் கொள்ளும்
நாகரீகப் பூச்சி

உண்மையொன்றும் கண்டோம்
ஊக்கத்திறம் கண்டோம்
வண்ணப் பூச்சி நன்றே
வாழ்ந்திடுவோம் இன்றே

வண்ணப்பூச்சி போலே
வாழ்ந்திடுதல் வேண்டும்
எண்ணமிருந் தென்ன
இறக்கையெமக் கில்லை

-கவிஞர். கதிரேசபிள்ளை-

www.tamilarangam.net

# சிலையின் விலை?



நகரத்தில் ஒரு செல்வந்தர் இருந்தார். பெரிய அரசியல் தலைவர்கள், தர்மவான்கள் போன்றவர்கள் எல்லோரையும் தன் வீட்டுக்கு அழைப்பார். விருந்து கொடுப்பார். தன் செல்வாக்கைப் பற்றி, தனக்குள்ளேயே பெரிதாக எண்ணிக் கொள்வார். தானும் அவர்களைப் போல பெரிய மனிதன் என்றே எண்ணிக் கொள்வார்.

ஒருநாள் செல்வந்தர் நகரத்துக்குச் சென்றார். திடீரென்று வானம் இருண்டு பெரிய மழை பெய்தது. மழைக்காகக் கடை ஒன்றினுள் ஒதுங்கினார். அது சிலை செய்யும் கடை. அரசியல் தலைவர்கள், புகழ்

www.tamilarangam.net

பெற்ற பெரிய மனிதர்கள் ஆகியோரின் சிலைகள் அங்கு செய்து விற்கப்பட்டன. அதில் பெறப்படும் பணம் அநாதைக் குழந்தைகளுக்கு உதவுகின்றன என்றும் அறிந்தார். தானும் பெருமைக்குரியவன் தானே! தனது சிலையும் அங்கு விற்கப்பட வேண்டும் என்று விரும்பினார். தனது சிலையையும் செய்து விற்குமாறு அவர் சொன்னார்.

அவர்களும் அவரது சிலையைச் செய்ய ஒத்துக் கொண்டார்கள். அதற்கான பணத்தையும் கொடுத்து விட்டுச் செல்வந்தர் தன் வீட்டுக்குச் சென்றார். சில மாதங்கள் கடந்தன. செல்வந்தர் தனது சிலை என்ன விலைக்குப் போகின்றது? என்றறிய ஆசை கொண்டார். தன் காரியதரிசியைச் சிலை செய்து விற்கும் கடைக்கு அனுப்பித் தன் சிலை என்ன விலைக்குப் போகின்றது? என்று அறிந்து வரும்படி அனுப்பினார். காரியதரிசியும் கடைக்குச் சென்று திரும்பினான்.

செல்வந்தர் ஆவலோடு கேட்டார், "சிலை நல்ல விலைக்குப் போயிருக்கும். எவ்வளவுக்குப் போயிருக்கின்றதென்று பார்த்தாயா? சொல்." என்று படபடத்தார். காரியதரிசி சொல்வதில் தயக்கம் காட்டினார். செல்வந்தர் திகைத்துப் போய், "ஏன் சிலை செய்யப் படவே இல்லையா?" என்று கேட்டார். "இல்லை, சிலை செய்து வைத்திருக்கிறார்கள்." என்ற காரியதரிசி சொல்வதைச் சிறிது இடைநிறுத்தி "ஒரு அறிவிப்புப் போட்டிருந்தார்கள்.
மற்றச் சிலைகளை விலைக்கு வாங்கினால், உங்களின் சிலையை இனாமாகக் கொடுப்பார்களாம்." என்றார்.

www.tamilarangam.net

# மகாபாரதம்



பாண்டவர்கள் வேத்திரகீயத்தில் இருநதமபாது அரச்சுனனுக்காகப் பெண்ணைப் பெற்று வளர்த்துக கொண்ட பாஞ்சால அரசனான துருபதன பாண்டவர்களைப் பற்றிய செய்தி அறியாததால் பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் இறந்து விட்டதாகவே நினைத்தான். ஆனாலும் தனது குருவை அழைப்பித்து அந்தச் செய்தி உண்மையானதா? என்று கேட்டான். அவர் திரௌபதி அருச்சுனனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது விதியாக இருந்தால் அவர்கள் எங்காவது வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். இதை

www.tamilarangam.net

அறிய வேண்டுமானால் திரௌபதிக்குச் சுயம்வரம் நடத்த வேண்டும் என்று சொன்னார்.

திரௌபதிக்குச் சுயம்வர ஏற்பாடுகளை விரைவாகப் பாஞ்சால அரசன் செய்யத் தொடங்கினான். இது வேத்திரகீயத்தில் உள்ள பாண்டவர்களுக்கும் தெரிய வந்தது. தாயாகிய குந்தி தேவியும் இதில் ஆர்வம் கொண்டாள். எனவே பாண்டவர்கள், குந்திதேவி, மற்றும் வேத்திரகீயத்துப் பார்ப்பனரும் சேர்ந்து பாஞ்சால நகரத்தை நோக்கிப் புறப்பட்டனர். அவர்கள் வரும் வழியில் பாண்டவர்களின் பாட்டன் உறவைக் கொண்டவரும், வேதங்களை இயற்றியவருமாகிய வேதவியாசர் பாண்டவர்கள் கண்களுக்குத் தென்பட்டார்.

பாண்டவர்களுக்கு ஆனந்தமாக இருந்தது. வேதவியாசர் அவர்களிடம் "சென்று வெற்றி பெறுக!" என்று வாழ்த்தினார். அது மட்டுமல்லாமல் வெற்றி பெற்ற பின் சுயரூபத்தில் வாழலாம் என்றும் சொல்லி மறைந்தார். அவர்களும் ஒப்புக் கொண்டு பாஞ்சால நாட்டை நோக்கிச் சென்றார்கள். திரௌபதியோ தன்னை அருச்சுனனுக்கே அர்ப்பணிக்கத் தயாராகி இருந்தாள். ஆனாலும் சோதிடர்கள் தான் ஐவருடைய மனைவியாக வேண்டும் என்று கூறியிருந்ததை எண்ணி வருந்தினாள்.

ஆனாலும் தோழியர்களும் அரண்மனையிலுள்ள வயதான மாதரும் அவளைத் தேற்றினார்கள். பின்

www.tamilarangam.net

அவள் சுயம்வர மண்டபத்துக்குத் தோழியர் புடை சூழ வந்தாள். அரசகுமாரர்கள் எல்லோரும் அவளது அழகில் மயங்கினார்கள். மண்டபத்தில் இருந்த எல்லோரும் பாஞ்சால அரசகுமாரியின் அழகில் மயங்கிய வேளையில் அரசகுமாரியின் கண்களோ அரசகுமாரர்களிடையே அருச்சுனன் இருக்கின்றானா? என்று நோட்டமிட்டது. அருச்சுனனைத் தான் திருமணம் புரிய முடியாது போய்விட்டால் தான் பிறந்த வேள்வித்தீயிலேயே தான் மாண்டு விடப்பேவதாக அவள் தன் செவிலித்தாயிடம் சொல்லியிருந்தாள்.

அவளுடன் கூடவே வந்த செவிலித்தாய் மன்னர்களை ஒவ்வொருவராக அறிமுகம் செய்து வைத்தாள். பின் பாஞ்சால மன்னன் எழுந்து, "வீரமும் புகழ் மிக்க குலத்திலும் தோன்றிய இராச குமாரர்களே! அரசர்களே! அதோ! வில்லும் அம்புகளும் இருக்கின்றன. வேகமாகச் சுழலும் யந்திரத்தின் நடுவிலே காணப்படும் இலச்சினையை யார் தம் திறமையை உபயோகப்படுத்தி வீழ்த்துகிறார்களோ அவர்களுக்கு என் மகள் மாலையிடுவாள். இதோ போட்டி ஆரம்பமாகட்டும்." என்றான்.

அரசர்களுள் துரியோதனன் அவனது தம்பியர், கர்னன், கிருஷ்ணன், சகோதரனான பலராமன் ஆகியோரும் வந்திருந்தனர்.

-தொடரும்.-

www.tamilarangam.net

## விழிப்புணர்ச்சி:

விழிப்புணர்ச்சி என்பது தெளிந்த சிந்தனை என்பதாகும். இது இருந்தால் யாருமே நல்ல முறையில் வாழ முடியும். ஒரு மனிதனின் சாதனைகளுக்கு இது வழி வகுக்கும். இதை எப்படிப் பெறலாம்.

மேலான பெரிய விஷயங்களைப் பற்றிய சிந்தனை. புதிய புதிய மாற்றங்களை தங்களுக்குச் சாதகமான நிலையில் ஏற்றுக் கொள்ளும் குணம். தோல்வியைச் சமாளிக்கும் குணம். எது முக்கியமாகச் செய்ய வேண்டும் என்னும் தெளிவு. வாழ்வில் வரும் குறைகளை ஒதுக்கி விட்டு நிறைவைக் காணும் தன்மை இவைகள் விழிப்புணர்ச்சிக்கான காரணங்கள்.

-ஒரு மனோதத்துவக் கட்டுரையிலிருந்து.-

வாழ்க்கை என்பது மாடிப்படி போன்றது. தானாக இயங்கிக் கொள்ளும் படிகள் இல்லை. ஒவ்வொரு படியாகத்தான் மேலே ஏற வேண்டுமே தவிர, ஒரேயடியாகப் போக முடியாது. ஒரேயடியாக பாய்ந்து ஏற முடியாதது.

-ஏச்.எல். டேவிஸ்-

www.tamilarangam.net

# வினாவிடைப்போட்டி

முடிவுகள்:
1.ரோமன் கத்தோலிக்கர்.
2.இசை
3.மேற்கு வங்காளம்
4.பிலிப்பையின்ஸ்
5.சீனா

1. முதலாவது தமிழ் அகராதி இது என்று சொல்லப் படுகின்றது.

சல்லாபம், பத்து, அரசன், பாகம், இராகம், அந்தாதி.

2. அதை இயற்றியவர் வீரமாமுனிவர். இவர் இந்த நாட்டைச் சேர்ந்தவர்.

இல்லறம், புத்தகம், பாதாளம், அல்லி

3. மகாபாரதத்தை உலகுக்குத் தந்தது மட்டுமல்ல, வேதங்களை நான்காகத் தொகுத்தவரும் இவர்தான். அதனடன் சேர்த்தே இவர் பெயரையும் சொல்லுவார்கள்.

வேம்பு, பதக்கம், பதவிப்பிரமாணம், வியாகூலம், அசரீரி, புதர்.

www.tamilarangam.net

4. இராமாயணத்தை இயற்றியவர் இவர்

வானவில், இல்லாமை, ஆன்மீகம், பாற்கிண்ணம்.

5. சிலப்பதிகாரத்தை தந்த இவர் சேர நாட்டு இளவரசர்

இந்தியா, பவளம், பங்கம், அலங்கோலம்.

முடிவு திகதி:5.10.99

அறிவின் முதல் குழந்தைதான் எச்சரிக்கை என்பது.
-விக்டர்ஹ்யூகா-

தேவையில்லாத போது பேசாதிருங்கள், தேவைப்படும் போது தெளிவாகப் பேசுங்கள். தெளிவாய்ப் பேசும்போது தீப்பொறி பறக்கப் பேசுங்கள்.
-பிராங்ளின்-

நீங்கள் பலமுறை தோல்வி கண்டிருக்கிறீர்களா? அப்படி என்றால் நீங்கள் அதிஷ்டம் செய்தவர். ஏனென்றால் உங்களுக்கு எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற தெரிந்திருக்கும்.
நெப்போலியன் ஹீல்-

www.tamilarangam.net

# நரி அரசன்



அது ஒரு சிறிய காடு. அந்தக் காட்டில் சிங்கமே இல்லை. வேங்கைகள் கூட இல்லை என்றே சொல்லுமளவுக்குக் குறைவாக இருந்தன. நரிகள், மான்கள், மரைகள், யானைகள், முயல்கள் போன்றன வாழ்ந்து வந்தன. உருவத்திலும் பலத்திலும் பெரிதான யானைகள் இருந்தும் யானைகளுக்கு அரசாளும் விருப்பம் இருக்கவில்லை. அவைகள் தாமுண்டு தம் வேலையுண்டு என்று வாழ்ந்து வந்தன. வேங்கைகள் ஒன்றாகச் சேர்ந்து வேறிடத்திற்குச் சென்று விட்டன. தாயில்லாத குட்டி வேங்கை ஒன்று மட்டும் வாழ்ந்து வந்தது.

அதற்கு அங்கிருந்த நரி ஒன்று உணவு கொடுத்து வந்தது. அது குழந்தையாக நரியிடம் வளர்ந்தால் அது கோழையாக இருந்தது. ஆனாலும் மினுமினென்று வளர்ந்து வந்தது. நரியின் குட்டியோடு

www.tamilarangam.net

வேங்கைக்குட்டியும் சேர்ந்து வளர்ந்ததால் வேங்கை சாதுவாகவே இருந்தது. நரி உணவு கொடுத்து வளர்த்ததால், அதற்குத் தன் வலிமை தெரியவில்லை. குட்டிநரியும், குட்டிவேங்கையும் பெரிதாயின. வேங்கையைக் கண்டதும் மற்றைய மிருகங்கள் பயந்து ஓடின. அதற்கு அவை ஏன் ஓடுகின்றன என்று தெரிவதில்லை. ஆனால் விளையாட்டுக்காக அவைகளைச் சீறிக் கத்திப் பயப்படுத்தும்.

இதைக் கண்ட அதனுடைய தோழனாக இருந்த நரிக்கு மூளை நன்றாக வேலை செய்தது. தான் அரசனாக நல்ல சந்தர்ப்பம் இது என்று எண்ணியது. தான் வல்லமை பொருந்தியவன் என்று எல்லா மிருகங்களிடமும் சவால் விட்டது. மிருகங்கள் எல்லாமே எதிர்த்தன. "நீ வல்லமை பொருந்தியவனாக இருந்தால் அதை எங்களுக்கு நிரூபித்துக் காட்டு." என்றன. அதற்கு நரி, "அதோ! அந்த வேங்கைக்கு எல்லோருமே பயப்படுகிறீர்கள் அல்லவா? அந்த வேங்கையை என் சொல்லுக்குக் கட்டுப்பட வைக்கிறேன். அப்போது நம்புவீர்கள் அல்லவா?" என்றது. மற்ற மிருகங்களும் சம்மதித்தன.

மறுநாள் நரி தன் வேங்கைத் தோழனை அழைத்துக் கொண்டு கிளம்பியது. அதனைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்தது. அதனோடு சமனாக நடந்து வந்தது. அதனோடு தோழமையாக

www.tamilarangam.net

முகத்தோடுமுகம் உரசிக் கொண்டது. அதன் முதுகின் மேலேறிச் சவாரி செய்தது. அப்படிப் பல வித்தைகளையும் செய்தது. மற்றைய மிருகங்கள் பயத்தில் ஓடின. பற்றைகளுக்குள் மறைந்திருந்து எட்டிப் பார்த்தன. பின்பு தன் தோழனை வீட்டுக்கு அனுப்பி விட்டுத் திரும்பி வந்தது.

பின் மற்றைய மிருகங்களைப் பார்த்து, "இப்போது எனக்கு அரசனாகத் தகுதி இருக்கின்றதா? இல்லையா? என்ன சொல்லுகிறீர்கள்?" என்றது. எல்லா மிருகங்களும் ஆமோதித்துத் தலையாட்டின. பின் நரியும் அரசனாகியது. ஆனாலும் வேங்கையையும் அன்போடு தன்னுடனேயே வைத்துக் கொண்டது.



நீங்கள் பலமுறை தோல்வி கண்டிருக்கிறீர்களா? அப்படி என்றால் நீங்கள் அதிஷ்டம் செய்தவர். ஏனென்றால் உங்களுக்கு எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற தெரிந்திருக்கும்.
நெப்போலியன் ஹீல்-

www.tamilarangam.net

# மிகப் பெரியவன்



கண்ணன் முகத்தில் இரத்தக் காயத்தோடு அழுது கொண்டு வருகிறான். பார்க்கும் பெற்றோருக்கு எப்படி இருக்கும். அம்மா, “நீதான் ஒருவரோடும் சண்டை போட மாட்டாயே? யார் உனக்கு அடித்தார்கள்.” என்று கேட்டாள். அவன் அழுது கொண்டானே தவிர எதுவும் பேசவில்லை. அப்பாவும் கேட்டுப் பார்த்தும் பயனில்லை.

இருவரும் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள், “இவன் ஏன் சொல்ல மாட்டேன் என்கிறான்.

www.tamilarangam.net

ஒருவேளை இவன் தான் ஏதாவது செய்திருப்பானா?” என்று அப்பாவிடம், அம்மா சொன்னாள், “ஏதோ அவன் பயப்படகின்றான். இனியும் ஏதாவது நடந்தால் பார்ப்போம்”. கண்ணனுக்கு அழுகை அழுகையாக வந்தது. அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

நாட்கள் சென்றன. வருடப் பரீட்சையும் வந்தது. தாவரவியல் பாடம் நடந்து கொண்டிருந்தது. தான் எழுதிய விடைத்தாள்களைப் பார்த்து எழுதுவதற்காக மோகனுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுது பார்வையாளர்களால் பிடிபட்டு விட்டார்கள். இருவருமே கல்லூரி அதிபரிடம் கொண்டு செல்லப்பட்டார்கள். அதிபர் கேட்கும் முன்னதாகவே கண்ணன் தான் மோகனிடம் தனது விடை சரியானதா? என்று பார்ப்பதற்காகக் கொடுத்ததாகக் கூறினான். அதிபரும் மன்னித்து அனுப்பி விட்டார்.

பரீட்சையிலும் கண்ணன் பின்தங்கி விட்டான். மோகன் பரீட்சையில் கூடுதல் புள்ளிகளைப் பெற்றிருந்தான். ஆசிரியர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. மோகன் வகுப்பில் சரியான குளப்படிகாரனாக இருந்தான். அவன் எப்படி இவ்வளவு திருந்தியவனாக மாறினான், கண்ணன் கெட்டிக்காரனாக இருந்தானே, அவன் ஏன் படிப்பில் குறைந்து விட்டான் என்று யோசித்தார்கள். அவர்களுக்கு எதுவுமே புரியவில்லை.

www.tamilarangam.net

வீட்டிலும் அப்பா நன்றாகப் பேசித் திட்டினார். அம்மா தெய்வங்களை எல்லாம் அழுதழுது கும்பிட்டாள். பள்ளிக்கூடத்தில் பொதுஅறிவுப்போட்டி நடந்தது. கண்ணன் எல்லோரையும் விடக் கூடுதலாகப் புள்ளிகள் பெற்றிருந்தான். திரும்பி வரும்போது மோகனும் அவனது நண்பர்களும் சேர்ந்து கண்ணனை நிலத்தில் விழுத்தி அடித்தார்கள். இதை வேறு சிறுவர்களும் பார்த்தார்கள். அவனை அடித்து விட்டுச் செல்லும்போது கண்ணனிடம் "எனக்காக நீ எதையும் செய்வாய் என்று நம்பினேன். பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்று விட்டாய் நீ" என்று பேசிக் கொண்டே அடித்தான்.

கண்ணனும் வீட்டுக்குச் சென்று விட்டான். வீட்டில் நாயொன்று தன்னை விரட்டிக் கடிக்க வந்ததால் தான் பற்றைக்குள் ஒளிந்தபோது முட்கள் கீறியதாகச் சொன்னான். ஆனால் விஷயம் கல்லூரிக்கு வந்தது. கண்ணனையும், மோகனையும் அழைத்து விசாரித்தார்கள். கண்ணன் ஏதும் சொல்லாமல் அழுதான். மோகன் பேசாமல் நின்றான். ஆனால் சண்டையிட்டதைப் பார்த்த சிறுவர்கள் தாங்கள் பார்த்ததை, கேட்டதை எல்லாம் அதிபரிடம் கூறினார்கள்.

இருவரின் பெற்றோரும் வரவழைத்து விசாரிக்கப் பட்டனர். அப்போது கண்ணன், "சேர்! மோகனின் அப்பாவின் நிறுவனத்தில் என் அப்பா வேலை

www.tamilarangam.net

செய்கிறார். மோகன் சொல்வதை நான் கேட்காவிட்டால் தன் அப்பாவிடம் சொல்லி என் அப்பாவை வேலையை விட்டு நீங்கி விடுவேன் என்று சொன்னான். அதனால் தான் நான் மோகனுக்காக எதையும் செய்தேன். அவன் முதலிடம் வரவேண்டுமென்பதற்காக நான் எழுதிக் கொடுத்தேன். மோகன் முதலிடத்திற்கு வந்தான். பொது அறிவுப்போட்டியிலும் சேராமல் நான் இருந்தேன். தமிழ் ஆசிரியர் தான் நான் கலந்து கொள்ள வேண்டுமென்று அனுப்பினார். அதற்குத் தான் மோகன் தன் சினேகிதரோடு சேர்ந்து என்னை அடித்து விட்டான். இதைப் பெரிது படுத்தி மோகனைக் கல்லூரியால் நீக்கி விடாதிர்கள், சேர்" என்று அழுதான்.

மோகனின் தந்தை கண்ணனைக் கட்டிக் கொண்டார். "உன்னைப் பெற்றவர்கள் பெருமைக்குரியவர்கள். அப்பாவின் வேலை போய் விடும் என்பதற்காக நீ கெட்ட பெரைச் சம்பாதித்துக் கொண்டாய். உன் அப்பா தலை நிமிர்ந்து நிற்கிறார் ஆனால் பெரிய நிறுவனத்தின் நிர்வாகியாகி என்ன? என் மகனால் தலை குனிந்து நிற்கிறேன். என் மகனின் செயலுக்காக நான் மன்னிப்புக் டேக்கிறேன்." என்று கூறி விட்டு போகப் புறப்பட்டார்.

அப்போது கண்ணன் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு "மோகன் வீட்டுக்கு வந்தால் அவனை அடிக்காதீர்கள். அவன் இனிப் படிப்பான். நான்

www.tamilarangam.net

எனக்குத் தெரிந்ததெல்லாம் அவனுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். என் அப்பாவை வேலையில்லிருந்து நீக்கி விட மாட்டீர்களே?" என்று கேட்டான். "இல்லை!, உன் எதிரியையும் மன்னிக்கிறாயே நீ மிகப் பெரியவன். இனி என் மகனை நல்லவனாக்குவதை உன்னிடம் தருகிறேன். உனது சம்பளமாக உன் படிப்புச் செலவுகளை நான் ஏற்றுக் கொள்கிறேன்." என்றார்.

புகழ் என்பது தண்ணீரில் தோன்றும் வளையம். அகலமாகப் போய்க் கொண்டே இருக்கும். இறுதியில் மறைந்து விடும்.

-ஜேர்மனிப் பழமொழி-

உன்இதயம் ரோஜாவாக இருந்தால் உன் பேச்சில் மணம் இருக்கும்.

-சுவாமி சின்மயானந்தா-

இரண்டாந்தரமான மனிதர்களைக் கொண்டு முதல் தரமான அரசாங்கத்தை உருவாக்க முடியாது.

-அரிஸ்டோட்டில்-

மனித நாகரீகத்தைத் தோற்றுவித்தவன் ஆணாக இருக்கலாம். அதைக் கட்டிக் காப்பவள் பெண் தான்.

-இந்தியப் பழமொழி-

www.tamilarangam.net

## கடிதம்



உலக சமாதானத்துக்காகப் பெண்கள் சங்கம் ஒன்று நிதி சேகரித்தது. அதற்காகப் புகழ் பெற்ற எழுத்தாளர்களின் நூல்களைச் சேகரித்தது. இதற்காகப் பெர்னார்ட்ஷாவுக்கும் கடிதம் ஒன்று எழுதினார்கள். "புகழ் பெற்ற எழுத்தாளர்களின் நூல்களை ஏலத்தில் விற்றுப் பணத்தை உலக சமாதானத்துக்கான பிரசாரங்களுக்குச் செலவு செய்ய விரும்புகின்றோம். அதற்காக உங்களின் புத்தகம் ஒன்றை, உங்களின் கையெழுத்தோடு அனுப்பி வைக்க முடியுமா?" என்று கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்கள்.

பெர்னார்ட்ஷாவோ புத்தகம் அனுப்பவில்லை. பெண்கள் சங்கம் அனுப்பிய கடிதத்துக்குப் பதில் கடிதம் அனுப்பியிருந்தார். அதில், "உலக சமாதானத்துக்காகப் பாடுபடுவதற்கு ஐக்கிய நாடுகள்

www.tamilarangam.net

சபை **(U,N,O)** இருக்கிறது. அது செய்வதை விடவும் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று ஏளனமாகப் பதில் எழுதியிருந்தார்.

பெண்கள் சங்கத்தினர் அக்கடிதத்தை ஏலம் போட்டார்கள். ஷா எழுதிய புத்தகம் கூட 70 டொலருக்குத்தான் போயிருக்கும். கடிதமோ 170 டொலருக்கு ஏலத்தில் விற்பனையாகியது.

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

உதவி பெறுவதற்குச் சிறந்த இடம், அதை உங்களிடம் இருந்தே கேட்டுப் பெறுவது தான்.

-பெர்னாட்ஷா-

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

எந்த ஒரு செயலையும் அதற்குரிய காலங்களில் செய்ய வேண்டும்.

-ஔவையார்-

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

வாழ்க்கை என்றால் உழைத்துக் கொண்டே இருப்பதுதான் என்பதை உணர்ந்து வேலை செய்கிறீர்களா?. அப்படி என்றால் உங்கள் பாதம் பட்ட இடமெல்லாம் ரோஜாச்செடிகள் நிச்சயம் முளைக்கும்.

-லத்தீன் பழமொழி-

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Neklar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்